# NANDRI RAJANE

நன்றி இராஜனே

நன்றி இயேசுவே

நன்றி தேவனே

நன்றி தகப்பனே

எல்லா நிலமையிலும் நன்றி சொல்லுவேன்

இன்னல்களிலும் நன்றி சொல்லுவேன்

தேவன் கொடுத்தாலும் நன்றி சொல்லுவேன்

கொடுத்ததை எடுத்தாலும் நன்றி சொல்லுவேன்

1.அற்பமும் குப்பையுமான என்னை நினைத்தீரே

பாவத்தில் மூழ்கின பாவி என்னை நேசித்தீரே

நானே என்னை விரும்பவில்லையே

ஆனால் என்னை விரும்பும் தேவா

நேற்றும் இன்றும் என்றும் மாறா

பாசம் நேசம் பொழியும் தேவா

உம் பிள்ளை என்றீரே என்னை அணைத்துக்கொண்டீரே

2.மலைபோன்ற சூழ்நிலைகளை மன்னோடு மன்னாக்கினீர்

என்னை எதிர்த்து வந்த சத்துருக்களை வேரோடு அழித்துவிட்டீர்
எனக்காய் என்றும் யுத்தம் செய்கிறீர்

நித்தம் நித்தம் காத்து வருகிறீர்

பயம் துக்கம் என் வாழ்வில் இல்லை

தோல்வி என்பது என்றும் இல்லை

என்னை காப்பவர் நீர் உறங்குவதில்லையே